தமிழ் நாடு வருவாய்த்துறை

திருவள்ளூர் மாவட்டம்

திருவள்ளூர் வட்டம்

அறிவிக்கை (Notification)

**கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்**

| | |
|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.அ1/25627/2020, நாள்:10.02.2021ன்படி அறிவிக்கப்பட்ட பத்திரிக்கை செய்தி மற்றும் 20.01.2022, 25.01.2022 மற்றும் 28.01.2022 ஆகிய தேதிகளில் சம்மந்தப்பட்ட வட்டாட்சியர்களால் தங்களது வட்டத்தில் மூன்றாண்டுகளுக்கும் குறைவாக உள்ள கிராம உதவியாளர் பணியிடம் நிரப்புவதாக வெளியிடப்பட்ட பத்திரிக்கை செய்தி ஆகியவை நிர்வாக காரணங்களுக்காக ரத்து செய்யப்பட்டு அவற்றின் மூலம் பெறப்பட்ட மனுவின் மீது மேல்நடவடிக்கை தொடரவேண்டம் என அறிவிக்கப்படுகிறது. |
| 2. | (பத்திரிக்கைச் செய்தி மூலம், திருவள்ளூர் , மாவட்ட ஆட்சியர் அலுவலக கோப்பு எண் நக.அ1/25627/2020, நாள் 10.02.2021-ன்டி கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்புதல் பொருட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ள நிகழ்வு நிர்வாக காரணங்களுக்காக ரத்து செய்யப்பட்டுள்ளது.) |

திருவள்ளூர் மாவட்டத்தில் கீழ்கண்டுள்ளவாறு, வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் அடங்கிய கிராமங்களுக்கு கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் தகுதியான விண்ணப்பதாரர் களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கிராம உதவியாளர் - திருவள்ளூர் ( 17 ) காலிப்பணியிடங்கள்

| வ.எண் | வருவாய் வட்டத்தின் பெயர் | கிராம உதவியாளர் பணியிடம் காலியாக உள்ள வருவாய் கிராமத்தின் பெயர் | இன சுழற்சி (Rotation) | இட ஒதுக்கீடு (Turn) |
|---|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | 107. கசவநல்லாத்தூர் | 72 | ஆதிதிராவிடர் (முன்னுரிமை பெற்றவர்) |
| 2 | திருவள்ளூர் | 50.சிட்டத்தூர் | 73 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர்(முன்னுரிமையற்றவர்) (W) |
| 3 | திருவள்ளூர் | 62.காரணிநிசாம்பட்டு | 74 | பிற்படுத்தப்பட்டோா ( பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்கள் தவிர) (முன்னுரிமையற்றவர்) |
| 4 | திருவள்ளூர் | 83.சிவன்வாயில் | 75 | பொதுப்போட்டி (முன்னுரிமையற்றவர்) |
| 5 | திருவள்ளூர் | 21.எறையூர் | 76 | ஆதிதிராவிடர் (முன்னுரிமையற்றவர்) (W) |
| 6 | திருவள்ளூர் | 110. விடையூர் | 77 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் (முன்னுரிமை பெற்றவர்)) |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | திருவள்ளூர் | 81.சிறுகளத்தூர் | 78 | பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் (முன்னுரிமையற்றவர்) |
| 8 | திருவள்ளூர் | 33.அம்மணம்பாக்கம் | 79 | பொதுப்போட்டி (முன்னுரிமையற்றவர்) |
| 9 | திருவள்ளூர் | 35.சேத்துப்பாக்கம் | 80 | பிற்படுத்தப்பட்டோர் ( பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (முன்னுரிமை பெற்றவர்) |
| 10 | திருவள்ளூர் | 43.மாகரல் | 81 | பொதுப்போட்டி (முன்னுரிமையற்றவர்) (W) |
| 11 | திருவள்ளூர் | 72.அதிகத்தூர் | 82 | ஆதிதிராவிடர் (முன்னுரிமையற்றவர்) |
| 12 | திருவள்ளூர் | 24.மேலானூர் | 83 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் (முன்னுரிமையற்றவர்) |
| 13 | திருவள்ளூர் | 74.பெரியகுப்பம் | 84 | பிற்படுத்தப்பட்டோர் ( பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (முன்னுரிமையற்றவர்) (W) |
| 14 | திருவள்ளூர் | 103.இலுப்பூர் | 85 | பொதுப்போட்டி (முன்னுரிமை பெற்றவர்) |
| 15 | திருவள்ளூர் | 22.சித்தம்பாக்கம் | 86 | ஆதிதிராவிடர் (முன்னுரிமையற்றவர்) |
| 16 | திருவள்ளூர் | 73.சேலை | 87 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் (முன்னுரிமையற்றவர்) |
| 17 | திருவள்ளூர் | 122.புதுமாவிலங்கை | 88 | பிற்படுத்தப்பட்டோர் ( பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (முன்னுரிமையற்றவர்) |

தகுதிகள்:-

1) காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமப் பகுதிக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.
2) தகுதியான விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட கிராமத்தில் இல்லாவிட்டால் அக்கிராமத்தின் எல்லையை ஒட்டிய கிராமத்திலிருந்து விண்ணப்பிக்கும் தகுதிவாய்ந்த நபர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும்.

| இனம் | வயது (30.09.2022 அன்று) | கல்வித் தகுதி |
|---|---|---|
| பொதுப்பிரிவினர் | விண்ணப்பிக்கும் நாளில் 21 வயது பூர்த்தி அடைந்தும் 30.09.2022 அன்று 32 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | குறைந்தபட்சம் ஐந்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் |
| ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (மற்றும் சீர்மரபினர்)/ பிற்படுத்தப்பட்டோர் | விண்ணப்பிக்கும் நாளில் 21 வயது பூர்த்தி அடைந்தும் 30.09.2022 அன்று 37 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | |
| அரசு பணிகளில் நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்படுவதற்கான வயது உச்ச வரம்பினை இரண்டு ஆண்டுகள் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள் 13.09.2021-ன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. | | |

## நிபந்தனைகள்

1) விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளை கண்டிப்பாக இணைத்தல் வேண்டும்.
2) மிதிவண்டி ஓட்டத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
3) விண்ணப்பதாரர்கள் திருவள்ளூர் வட்டத்தினைச் சேர்ந்தவர்களாகவும், அதே வட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருபவர்களாகவும் இருக்க வேண்டும். காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு அக்கிராம பணியிடத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4) இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5) ஒவ்வொரு கிராம உதவியாளர் பணியிடத்திற்கும் தகுதியின் அடிப்படையில் இணைய வழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
6) அரசு விதிகளின்படி இன சுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்

தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு Special Time Scales of Pay Matrix Level 6 (Minimum Rs.11,100/- Maximum Rs.35,100/-) ஊதிய ஏற்ற முறையில் அடிப்படை ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்ட படிகள் வழங்கப்படும்.

மேற்கண்ட கிராம உதவியாளர் காலி பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் தமிழக அரசின் இணையதளமான https://www.tn.gov.in மற்றும் வருவாய் நிருவாகத் துறையின் இணையதளமான https://www.cra.tn.gov.in மற்றும் திருவள்ளூர் மாவட்ட அதிகாரப்பூர்வ இணையதளமானhttps://tiruvallur.nic.in மூலம் 10-10-2022 முதல் 07-11-2022 மாலை 05.45 மணி வரை விண்ணப்பங்கள் இணையவழி மூலம் மட்டுமே வரவேற்கப்படுகின்றன. 07-11-2022 அன்று மாலை 05.45 மணிக்கு மேல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

குறிப்பு: மேற்கண்ட பதவிக்கான விண்ணப்பங்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பெறப்பட மாட்டாது. நேரடியாக மற்றும் தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10/10/2022

வட்டாட்சியர்,
திருவள்ளூர்

10/10/22